18 January 2010
AI Index: ASA 37/002/2010
TG: ASA 37/2010.001

# இலங்கை: ஒரு புதிய தொடக்கத்துக்கான நேரம்
# இலங்கையின் ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர்களுக்கான கோரிக்கை

இலங்கையில் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் அனைவரும், நாட்டில் மனித உரிமைகள் மதிக்கப்படும் விஷயத்தில் முன்னேற்றம் காண வலுவான ஈடுபாடு காட்ட வேண்டும். இலங்கையில் தசாப்த காலங்களாகவே பரவலாகப் புரையோடிப்போயிருந்த மனித உரிமை மீறல்களையும், இந்த மீறல்களுக்கு ஏதுவாய் குற்றவாளிகள் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பிவந்த சூழலையும் முடிவுக்கு கொண்டுவர அவர்கள் உறுதி பூண வேண்டும்.

இலங்கை மனித உரிமைகள் தொடர்பான தனது சர்வதேச கடப்பாடுகளை பூர்த்தி செய்ய வேண்டும் என்பதில் இலங்கையின் ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர்கள் வெளிப்படையாக ஈடுபாடு காட்ட வேண்டும் என்று சர்வதேச பொதுமன்னிப்பு சபை வலியுறுத்துகிறது. நல்லாட்சி, சட்டத்தின் மாட்சிமை, மனித உரிமைகள் மதித்துப் பேணப்படுதல் போன்ற விஷயங்களில் இலங்கை உரிய தரங்களை எட்டவும் உயரிய தரங்களை ஏற்படுத்தவும் வேண்டும் என சர்வதேச பொதுமன்னிப்பு சபை கேட்டுக்கொள்கிறது. அதன் முக்கிய முதற்படியாக கீழே கோடிகாட்டப்பட்டுள்ள மனித உரிமைகள் தொடர்பான பத்து அம்ச செயல் திட்டத்தில் ஜனாதிபதி வேட்பாளர்கள் அனைவரும் ஈடுபாடு காட்ட வேண்டும் என எமது அமைப்பு கோருகிறது.

மனித உரிமை மற்றும் மனிதாபிமான சட்ட மீறல்களுக்குக் காரணமானவர்கள் அவற்றுக்கு பொறுப்பேற்க வேண்டும் என்ற விவகாரம் வரும் ஜனவரி 26ஆம் தேதி நடக்கத் திட்டமிடப்பட்டுள்ள இலங்கை ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரத்தில் ஒரு முக்கிய விவகாரமாக ஆகியிருப்பதை சர்வதேச பொதுமன்னிப்பு சபை வரவேற்கிறது. நடக்கவுள்ள தேர்தலில் 20க்கும் மேற்பட்டவர்கள் போட்டியிடுகின்றனர் என்றாலும், இரண்டு முக்கிய வேட்பாளர்களே தேர்தல் களத்தில் முன்னிலை வகிக்கின்றனர். ஒருவர் தற்போதைய அதிபரான மஹிந்த ராபக்ஷ அவர்கள் மற்றவர் முன்னாள் இராணுவத் தளபதியும், கூட்டுப் படைகளின் தலைமை அதிகாரியுமான ஓய்வுபெற்ற ஜெனரல் சரத் ஃபொன்சேகா அவர்கள். இத்தேர்தலில் தான் போட்டியிடப்போவதாக கடந்த 2009 நவம்பர் பிற்பகுதியில் ஃபொன்சேகா அறிவித்ததிலிருந்தே, கடந்த மே மாதம் விடுதலைப் புலிகளுக்கு எதிராக இலங்கை அரச படையினர் பெற்ற வெற்றிக்குரிய பெருமை தன்னையே சேரும் என இந்த இரண்டு வேட்பாளர்களும் கூறி வாக்கு சேகரித்து வருகின்றனர். ஆனால் அதேநேரம் மோதல்களின் இறுதிக் கட்டங்களில் நடந்ததாகத் தெரிவிக்கப்படும் மனித உரிமை மற்றும் மனிதாபிமான சட்ட மீறல்களுக்குப் பொறுப்பேற்பதை இவர்கள் இருவருமே தட்டிக்கழித்து வருகின்றனர்.

அரசாங்கப் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் 25 வருட காலத்துக்கும் மேலாக நடந்த ஆயுத மோதல்களிலிருந்து இலங்கை சமீபத்தில்தான்

வெளிவந்துள்ளது. மோதல்கள் நடந்த காலகட்டத்தில் இருதரப்புமே மனிதாபிமானச் சட்டங்களை மீறியிருந்தன. பெரியவர்களையும் சரி சிறார்களையும் சரி விடுதலைப் புலிகள் வலுக்கட்டாயமாக தமது இயக்கத்தில் சேர்த்திருந்தனர். பின்வாங்கும் தமது படையினருடன் பொதுமக்களையும் வலுக்கட்டாயமாக இவர்கள் இழுத்துச் சென்றிருந்தனர். முன்னேறிவரும் இலங்கை படையினரை நிறுத்தும் மனிதக் கேடயங்களாக பொதுமக்களை அவர்கள் பயன்படுத்தியிருந்தனர். உயிராபத்துக்கிடையில் வலுக்கட்டாயமாக மோதல் பிரதேசங்களில் பொதுமக்கள் தங்கவைக்கப்பட்டிருந்த நிலையில், இப்பொதுமக்கள் அடர்த்தியாகத் தங்கியிருந்த பிரதேசங்களில் அரச படையினர் ஷெல் வீச்சுகள் நடத்தியதில் சிவிலியன்கள் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டிருந்தனர். தமது பிடியிலிருந்து தப்பிச் செல்ல முற்பட்ட சிவிலியன்களை துப்பாக்கியால் சுட்டு கொன்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மோதல்களின்போது இராணுவச் சிப்பாய்கள், அவர்களுக்கு கட்டளையிடும் அதிகாரிகள் மற்றும் சிவில் நிர்வாக உயர் அதிகாரிகள் போன்றோர் தமது காரியங்களுக்கு பதில் சொல்ல வேண்டும் என்பது மிகவும் முக்கியம். ஆனாலும் இது மனித உரிமை பேணல் தொடர்பில் இலங்கை கொண்டுள்ள அவப்பெயரை சரிசெய்வதிலும், அரசாங்கம், நீதித்துறை மற்றும் சட்டத்தின் மாட்சிமை ஆகியவற்றின் மீது மீண்டும் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்துவதிலும் இலங்கை எதிர்கொள்ளும் மிகப் பெரிய சவாலின் ஒரு அங்கம் மட்டுமே. இலங்கையில் வாழும் ஆண், பெண், குழந்தை என ஒவ்வொருவருடைய மனித உரிமையையும் பலனளிக்கக்கூடிய வகையிலும் பாரபட்சம் இன்றியும் பாதுகாக்கவல்ல வகையில் இலங்கை தன்னை மாற்றிக் கட்டமைத்துக்கொள்வதற்கான ஒரு சந்தர்ப்பம் தற்போது கிடைத்துள்ளது. மேம்பட்ட ஓர் இலங்கை கட்டமைக்கப்பட வேண்டுமானால், அதற்குத் தேவையான சீர்திருத்தங்களைச் செய்வதில் தாங்கள் ஈடுபாடு காட்டுகிறோம் என்ற உறுதிப்பாட்டை ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர்கள் அனைவரும் வாக்காளிக்கும் மக்கள் முன்பு வெளிப்படுத்துவது அவசியம்.

## அனைத்து வேட்பாளர்களுக்குமான மனித உரிமைகள் செயல்திட்டம்:

1. **எதேச்சதிகாரத்துடன் மக்கள் கைதுசெய்யப்படுவதையும் தடுத்துவைக்கப்படுவதையும் அவசர சட்டம் மூலம் முடிவுக்கு கொண்டுவருதல்; தடுத்துவைக்கப்பட்டுள்ளோர் அனைவரது பெயர் விபரங்களையும் வெளியிடுதல்**

விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள பல்லாயிரம் பேர் விடுவிக்கப்படுவார்கள் என்று தற்போதைய அரசாங்கமும் எதிர்க்கட்சி வேட்பாளர்களும் வழங்கியுள்ள வாக்குறுதியை இலங்கையின் அடுத்த ஜனாதிபதி நிறைவேற்ற வேண்டும். சர்வதேச சட்டங்களின் கீழ் குற்றமாகக் கருதக்கூடிய செயலைச் செய்தவர்களாக குற்றம்சாட்டப்படுபவர்கள், சுயாதீனமான நீதிமன்றம் ஒன்றால் காவலில் வைக்கப்படுபவர்கள், சிவிலியன் நீதிமன்றம் ஒன்றால் விசாரிக்கப்பட்டு, மரண தண்டனை தவிர்க்கப்பட்டு சர்வதேச தரத்தில் நியாயமாக தண்டிக்கப்படுவர்கள் அல்லாது சந்தேகத்தின் பேரில் தடுத்துவைக்கப்படுள்ளவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும். யுத்தப் பிரதேசங்களில் இருந்து வெளியேறி வந்த மக்களில் விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் வட பகுதி

முகாம்களில் தடுத்துவைக்கபட்டுள்ள 11,000 பேர் அல்லாது நாட்டின் பிற இடங்களில் உள்ள சிறைகள் மற்றும் தடுப்பு முகாம்களில் விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் வேறு நூற்றுக்கணக்கானோரும் எவ்விதமான முறையான குற்றச்சாட்டும் தெரிவிக்கப்படாமல் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

வழக்கு விசாரணைக்காக காத்திருக்கின்ற அல்லது அதற்கு ஆட்படுகின்ற நேரத்தில் தடுத்துவைக்கப்பட்டவர்கள் பிணையில் வெளியே செல்ல அனுமதி இருக்க வேண்டும். அவர்கள் சட்டத்தரணிகளையும் மருத்துவர்களையும் தமது குடும்பத்தாரையும் சந்திக்க இடமிருக்க வேண்டும். தாம் தடுத்துவைக்கப்பட்டது சட்டப்படி சரியா என்று கேட்டு சுயாதீன நீதிமன்றத்தில் முறையிட அவருக்கு உரிமை இருக்க வேண்டும். எதிர்காலத்தில் குற்ற சந்தேக கைது நடவடிக்கை அனைத்தும் சட்டப்படி கைதுசெய்வதற்குரிய அதிகாரம் பெற்ற அதிகாரிகளால் மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டும். கைதுசெய்யப்படுகின்றவரிடம் அந்த அதிகாரி தன் யார் என்பதை தெரியப்படுத்த வேண்டும். அச்சம்பவத்தை காண நேர்கின்றவர்கள் பிறர் கேட்கும் பட்சத்தில் அவர்களிடமும் அதிகாரி  தன்னுடைய பெயர் விபரங்களைத் தெரிவிக்க வேண்டும். ஆட்கள் தடுத்துவைக்கப்படுவதற்குரிய இடமாக பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட இடங்களில்தான் கைதுசெய்யப்பட்டவர்கள் தடுத்துவைக்கப்பட வேண்டும். காவலில் வைத்த பின்னர் அவர்கள் தாமதமின்றி நீதித்துறை அதிகாரிகள் முன்பு கொண்டுவரப்பட வேண்டும்.

ஒரு நபர் கைதுசெய்யப்பட்டது பற்றியும், அவர் தடுத்துவைக்கப்பட்டுள்ள இடம் பற்றியும், அவர் இடம் மாறுவது அல்லது விடுதலை செய்யப்படுவது பற்றியும் துல்லியமான விபரங்கள் அந்நபரின் உறவினர்கள், சட்டத்தரணிகள் மற்றும் நீதிமன்றங்களுக்கு கிடைக்க வழி இருத்தல் வேண்டும்.

கைதுசெய்யப்பட்டவர் ஒருவர் எங்கு தடுத்துவைக்கப்பட்டுள்ளார், எந்த அதிகாரத்தின் கீழ் அவர் தடுத்துவைக்கப்பட்டுள்ளார் என்பது பற்றி உடனடியாக விபரம் அறிவதில் பலன் தரக்கூடிய நீதித்துறை வழிமுறைகள் உறவினர்களுக்கும் சட்டத்தரணிகளுக்கும் இருத்தல் வேண்டும். தடுத்துவைக்கப்பட்டவர் அனைவர் பற்றி அவ்வப்போதைய விபரம் அடங்கிய பதிவுகள் எல்லா தடுப்பு மையங்களிலும் இருக்க வேண்டும். அனைத்து தடுப்பு முகாம்களிலும் உள்ள கைதிகள் பற்றிய விபரத் தொகுப்பும் ஓரிடத்தில் கிடைக்க வேண்டும். இந்தப் பதிவுகளில் உள்ள தகவல்கள் கைதிகளின் உறவினர், சட்டத்தரணிகள், நீதிபதிகள், தொலைந்தவர்கள் எங்குள்ளார்கள் என்று கண்டறிய முயற்சித்துவரும் உத்தியோகபூர்வ அமைப்புகள், மனித உரிமை தொடர்பான அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் சட்டபூர்வ நலனுடன் அணுகும் பிறருக்கும் கிடைக்க வழியிருக்க வேண்டும்.

பயங்கரவாத அச்சுறுத்தலை எதிர்ப்பது என்ற போர்வையில் இலங்கை அரசாங்கம் எதேச்சதிகார நடவடிக்கைகளைக் கையாண்டு வந்துள்ளது. குறிப்பாக தேசப் பாதுகாப்பு தொடர்பான சட்டங்கள் - பயங்கரவாதத் தடைச் சட்டம், பொதுப் பாதுகாப்பு அவசரச் சட்டம் மற்றும் சம்பந்தப்பட்ட அவசரகால விதிமுறைகள் போன்றவை - தொடர்ந்தும் நடைமுறையில் இருந்துவருகின்றன. (தேசிய நெருக்கடியின்போது மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டிய இச்சட்டங்கள், இலங்கையில் தசாப்த காலங்களாக

கிட்டத்தட்ட தொடர்ச்சியாகவே அமலில் இருந்துவருகின்றன.) ஒருவரை எதேச்சதிகாரத்துடன் கைதுசெய்வதற்கும், கிட்டத்தட்ட காலவரையின்றி தடுத்துவைப்பதற்கும் உண்டான அசாதரண அதிகாரங்களை இச்சட்டங்கள் அதிகாரிகளுக்கு வழங்கிவருகின்றன.

சர்வதேச சட்டங்கள், தர அளவுகோல்கள் ஆகியவற்றுக்கு எதிரான அவசரகால சட்டங்கள் அனைத்தையும் ரத்து செய்ய அல்லது திருத்தியமைக்க வழிசெய்யும் சட்டங்களை அறிமுகம் செய்வதில் ஈடுபாடு காட்ட தேர்தல் வேட்பாளர்கள் உறுதி பூண வேண்டும். அதிலும் குறிப்பாக சர்வதேச சட்டத்தின் அடிப்படையில் குற்றமாக அமைந்த காரியங்களைச் செய்தவர்கள் சட்ட நடவடிக்கையிலிருந்து தப்பிக்க வழிசெய்யும் அல்லது தப்பிப்பதை ஊக்குவிக்கும் வகையிலான சட்டங்களை நீக்க வேட்பாளர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். தடுப்புக் காவலுக்குரிய வழமையான இடங்கள் அல்லாது வெவ்வேறு இடங்களில் கைதிகளை அடைத்துவைப்பது, எவருக்கும் தெரியாமலேயே ஒருவரைத் தடுத்துவைப்பது போன்ற காரியங்களில் பாதுகாப்புப் படைகள் ஈடுபடுவதை நிறுத்த வேட்பாளர்கள் உறுதி ஏற்க வேண்டும். இவ்வாறு பாதுகப்புப் படையினர் நடந்துகொள்வது, கைதாகும் நபர்கள் சித்ரவதைக்கு ஆளாவது என்பதற்கும், பலவந்தத்தின் பேரில் ஆட்கள் காணாமல் போதல் என்பதற்குமான வாய்ப்புகளை அதிகரித்துவிடுகிறது.

### 2. சித்ரவதை, பிறவகையில் இழிவாக நடத்தப்படுதல். பலவந்தத்தின் பேரில் ஆட்கள் காணாமல் போதல் போன்றவற்றை முடிவுக்குக் கொண்டுவருதல்

ஆட்கடத்தல், பலவந்தத்தின் பேரில் ஆட்கள் காணாமல் போதல் போன்றவற்றுக்கு இலங்கையில் ஒரு நீண்ட சரித்திரமே உள்ளது. நாட்டின் பல பாகங்களில் அதிலும் குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளிலும் கொழும்பிலும் இப்படியான சம்பவங்கள் நடப்பதாக தொடர்ந்து செய்திகள் வரவே செய்கின்றன. அதேபோல் சித்ரவதை நடப்பதாகவும் பரவலாக செய்திகள் வரவே செய்கின்றன. விடுதலைப் புலி சந்தேக நபர்களை அரசாங்காத்தின் பாதுகாப்புப் படைகள் விசாரிப்பதிலும் சரி, பொலிசார் பொதுமக்களை விசாரிப்பதிலும் சரி சித்ரவதை பயன்படுத்தப்படுவதாகவே தெரிவிக்கப்படுகிறது. இப்படியான வழக்கங்களை முடிவுக்குக் கொண்டுவந்து, இலங்கையின் சட்டங்களை சர்வதேச தர அளவுகோல்கள் அளவுக்கு உயர்த்த வேட்பாளர்கள் உறுதி பூண வேண்டும். சர்வதேச தர அளவுகோல்களின் கீழ் சித்ரவதை, பலவந்தத்தின் ஆட்கள் காணாமல் போதல் போன்றவை தடைசெய்யப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட மக்களுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் சர்வதேச தர அளவுகோல்களில் நீதி கிடைப்பதையும், இழந்த உரிமையை மீண்டும் பெறுதல், நஷ்ட ஈடு பெறுதல், மறுவாழ்வு பெறுதல், திருப்தியளிக்கும் நிவாரணம் பெறுதல், மீண்டும் பாதிப்பு ஏற்படாது என்ற உத்திரவாதம் பெறுதல் போன்ற வழிகளில் குறைகள் தீர்க்கப்படுவதையும் வேட்பாளர்கள் உறுதிசெய்ய வேண்டும்.

### 3. உள்நாட்டளவில் இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் இடம்பெயர்ந்து ஊர் திரும்பியவர்களின் உரிமைகள் மதிக்கப்படுவதையும் பாதுகாக்கப்படுவதையும் உறுதிசெய்தல்

இடம்பெயர்ந்தவர்கள் 1,00,000 பேர் வரையிலானோர் முகாம்களில் தங்கியுள்ள நிலையில், உறைவிடத்துக்கும் நிவாரணத்துக்கும் அவர்கள் அரசாங்கத்தையே

நம்பியுள்ள நிலைமை இன்றளவும் காணப்படுகிறது. மீள் குடியேற்ற முயற்சியின் ஆரம்பக் கட்டங்களிலும், தம்முடைய சொந்த ஊர்களுக்கு அருகில் இடைத்தங்கல் நிலையங்களிலும் இதற்கும் கூடுதலானவர்கள் இருந்துவருகிறார்கள். இடம்பெயர்ந்த மக்களது உரிமைகள் மதிக்கப்படுதல், அவர்களுக்கு பாதுகாப்பு மற்றும் மனிதாபிமான உதவிகளை வழங்குதல் என்பவற்றுக்கு உடனடியாக முன்னுரிமை வழங்கப்படுதல் அவசியம்.

இடம்பெயர்ந்த மக்கள் மற்றும் சொந்த இடங்களுக்கு திரும்புகின்றவர் அனைவரது மனித உரிமைகளை, இலங்கையின் அரசியல் சாசனம் மற்றும் சர்வதேச சட்டங்கள் அடிப்படையில் உறுதி வழங்கப்பட்டுள்ள அடிப்படையில் மதிக்கவும் பாதுகாக்கவும் வேட்பாளர்கள் உறுதி பூண வேண்டும். நடமாட்ட சுதந்திரம், தனிமனித சுதந்திரம், உயிர்ப் பாதுகாப்பு, ஆரோக்கியமாக வாழ்வதற்கும், கல்வி பெறுவதற்கும், போதிய வாழ்க்கைத் தரத்துடன் இருப்பதற்கும் ஒருவருக்கு உள்ள உரிமை, சித்ரவதை, பிற இழிவான நடத்தை, ஆட்கடத்தல் போன்றவற்றுக்கு ஆளாகாமல் இருப்பதற்கான சுதந்திரம், அகதி முகாம்கள் நிர்வாகம், மீள்குடியேற்றம், மாற்று இட குடியேற்றம் போன்றவை தொடர்பான முடிவுகளில் இடம்பெயர்ந்த மக்கள் பங்கேற்பதற்கும், பலவந்தம் இன்றி தகவல் அறிவுடன் ஒப்புதல் தெரிவிப்பதற்கும் இடமிருக்க வேண்டும்.

இடம்பெயர்ந்துள்ளவர்கள் மற்றும் சொந்த ஊர் திரும்புபவர்கள் அனைவரும் இடைத்தங்கல் முகாம்களுக்குள்ளும் வேறு தற்காலிக வதிவிடங்களுக்குள்ளும் வந்துபோக அனுமதி வழங்க வேண்டும். அவ்விஷயத்தில் கட்டுப்பாடுகளோ, நேரக் கட்டுப்பாடுகளோ துன்புறுத்தல்களோ இருக்கக்கூடாது. இனம், பூர்வீக இடம், இடம்பெயர்ந்துள்ள தகுதி போன்றவை அடிப்படையில் இவர்களிடையில் பாரபட்சம் காட்டப்படக்கூடாது.

இடம்பெயர்ந்தவர்கள் முகாம்களில் இருந்தாலும் சரி, உறவினர் வீடுகள், தற்காலிக உறைவிடங்கள், அல்லது பழைய இடைத்தங்கல் முகாம்கள் என்று வேறு இடங்களில் இருந்தாலும் சரி அவர்களுக்கு போதுமான அளவில் நிவாரணம் வழங்கப்பட வேண்டும்.[1] சொந்த இடங்களுக்குத் திரும்பவோ, வேறு இடங்களில் குடியேறவோ முயற்சிக்கும் மக்களுக்கு உதவிகள் வழங்க வேண்டும். போதுமான அளவிலும், தொடர்ந்தும் பொருள் ரீதியான உதவி வழங்குவது என்பதும் இதில் அடங்கும்.

இடம்பெயர்ந்தவர்கள் தொடர்பான அரசாங்கத்தின் கொள்கைகளும் நடைமுறைகளும் தெளிவுபடுத்தப்பட வேண்டும். அப்போதுதான் இடம்பெயர்ந்த மக்கள் சொந்த ஊர் திரும்புவது அல்லது மாற்று இடங்களில் குடியேறுவது தொடர்பில் தகவல் அறிவுடனும் சுயமாகவும் முடிவுக்கு வர முடியும். இடம்பெயர்ந்த மக்களுக்கு உள்ள உரிமைகள், அவர்களுடைய சட்ட அந்தஸ்து, பிரிந்துபோன உறவினரை தேடுவதற்கான வழிமுறை, சொந்த ஊரிலோ, குடியேற விரும்பும் பிற இடங்களிலோ சூழ்நிலை எப்படியுள்ளது என்பவை பற்றி துல்லியமான விபரங்கள் வழங்குவது என்பதும் இதில் அடங்கும்.

இடம்பெயர்ந்த மக்கள், ஊர் திரும்ப முயற்சிப்பவர்கள் அல்லது வேறு இடங்களில்

---

1 யுத்தத்தால் வீடுகளும் நகரக் கட்டமைப்புகளும் அழிக்கப்பட்ட இடங்களுக்கு தற்சமயம் மக்கள் திரும்பிக்கொண்டுள்ளனர், ஆகவே இந்த இடங்களை மீளக் கட்டியமைக்க அவகாசம் எடுக்கும்.

குடியேற முயற்சிப்பவர்கள் ஆகியோரது பாதுகாப்பு சூழல் பற்றி தேசிய மட்டத்திலும் மற்றும் சர்வதேச மட்டத்திலும் செயல்படு மனிதாபிமான மற்றும் மனித உரிமை அமைப்புகள் கண்காணிக்க அனுமதி வழங்க வேண்டும். இந்த மக்களுக்கு போதிய உதவிகள் கிடைக்கின்றனவா, மனித உரிமை மீறல்களுக்கு எதிரான பாதுகாப்பு இருக்கிறதா என்பவற்றை அவ்வமைப்புகளால் அப்போதுதான் உறுதிசெய்ய முடியும்.

4. **கடந்த காலத் தவறுகளிலிருந்து பாடம் கற்று, தவறுகளைக் களைதல்**

இலங்கையின் நீதித்துறையானது மிக அதிகமாக அரசியல் அழுத்தங்களுக்கு உட்பட்டே நடக்க வேண்டிய ஓர் நிலை நாட்டில் உள்ளது. தவிர சாட்சிகளுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கு என செயல்திட்டங்கள் இல்லாத நிலையில் பெரும்பான்மையான மனித உரிமை மீறல்கள் புலன் விசாரணை செய்யப்படுவதுகூட இல்லை. ஆகவே இவை நீதிமன்றம் முன்பு விசாரணைக்கு வருவதற்கு அறவே வழியில்லை. நாட்டின் குற்றவியல் நீதி நிர்வாகக் கட்டமைப்பை மீளாய்வு செய்ய ஜனாதிபதியாக வருபவர் முயற்சி மேற்கொள்ள வேண்டும். மனித உரிமைகள் விவகாரத்தில் நிஜமான பொறுப்புணர்வுடன் நீதித்துறைக்கு இருந்திருக்கவில்லை என்பதையும், ஒழுங்கான குற்றவியல் விசாரணைகளுக்கு மாற்றாக அடிக்கடி அமைக்கப்படுகின்ற விசாரணைக் கமிஷன்களால் போதிய அளவில் நீதி வழங்க முடியவில்லை என்பதையும் அரசாங்கம் வெளிப்படையாகவே ஏற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறு மேற்கொள்ளப்படுகிற மீளாய்வு உண்மையாகவும், முழு ஆதரவுடனும், சுயாதீனமாகவும், தெளிவான மற்றும் நியாயமான காலக்கெடுவுடனும் பக்கச்சார்பின்றி நடத்தப்பட வேண்டும். நீதித்துறையின் குறைபாடுகள் பலவும் அவற்றுக்கு தீர்வாக அமையக்கூடிய யோசனைகள் பலவும் ஏற்கனவே அடையாளம் காணப்பட்டுள்ளன.

இந்த மீளாய்வு பின்வருவனவற்றைச் செய்ய வேண்டும்:

- பொலிஸ் புலன் விசாரணைகள்; விசாரணைக் கமிஷன்களின் விசாரணைகள், சர்வதேச சட்டங்கள் அடிப்படையில் குற்ற சந்தேக நபர்கள் மீதான சட்ட நடவடிக்கைகள் மற்றும் அவர்கள் தண்டிக்கப்படும் நடவடிக்கைகள் போன்றவை ஒழுங்காக நடப்பதற்குத் தடையாய் அமைந்திருந்த குறைபாடுகள் வெளிச்சத்துக்கு கொண்டுவரப்பட வேண்டும்;
- இதுவரை இரகசியமாக வைக்கப்பட்டுவந்த அப்படிப்பட்ட விசாரணைகளின் தரவுகள் ஆராயப்படவும் பிரசுரிக்கப்படவும் வேண்டும்; இத்தரவுகள் மற்றவரும் எளிதில் பெற வகைசெய்தல் வேண்டும். விசாரணை முடிவுகளின் நிலை குறித்து உத்தியோகபூர்வ அறிக்கைகள் வெளியிடப்பட வேண்டும்.
- இந்தக் குறைபாடுகள் மற்றும் பிரச்சினைகளை சட்ட ரீதியாகவும், நிர்வாக ரீதியாகவும், யதார்த்தமான நடவடிக்கைகள் மூலமாகவும் தீர்ப்பதற்கான யோசனைகள் முன்மொழியப்பட வேண்டும். இந்த யோசனைகள் சர்வதேச மனித உரிமைச் சட்டங்கள் மற்றும் தர அளவுகோல்களுக்கு உட்பட்டவையாக இருக்க வேண்டும்.
- இந்த மீளாய்வின் முடிவு பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட வேண்டும்.

அதிலும் குறிப்பாக 2005 ஆகஸ்ட் மாதத்துக்குப் பின்னர் நடந்த 16 'மோசமான மனித உரிமை மீறல் சம்பவங்கள்' தொடர்பில் 2006 நவம்பர் மாதம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களினால் அமைக்கப்பட்ட விசேட விசாரணைக் குழுவின் தரவுகள்

மற்றும் அறிக்கைகள் அனைத்தும் உடனடியாக பிரசுரிக்கப்பட வேண்டும் என சர்வதேச பொதுமன்னிப்பு சபை வலியுறுத்துகிறது. ஜனவரி 2006ல் திருகோணமலையில், கஜேந்திரன் ஷண்முகராஜா, ரோஹன் லோஹிதராஜா, சிவானந்த தங்கதுரை, ஹேமச்சந்திரன் யோகராஜா, ரஜீஹர் மனோஹரன் ஆகிய ஐந்து இளைஞர்கள் கொல்லப்பட்ட சம்பவம், 2006 ஆகஸ்ட் முற்பகுதியில் ஏ.சி.எ.ஃப். அதாவது பசிக்கு எதிரான நடவடிக்கை என்ற அரசு சாரா சர்வதேச தொண்டு நிறுவனத்தின் பணியாளர்கள் 17 பேர் கொல்லப்பட்ட சம்பவம் போன்றவை இதில் அடங்கும்.

5. **ஊடக சுதந்திரம் உள்ளிட்ட கருத்துரிமை சுதந்திரங்கள் வழங்கப்படுவதை உறுதிசெய்தல்**

இலங்கையில் தேசிய பாதுகாப்பு சட்டங்கள் அதிருப்தியாளர்களின் குரல்களை ஒடுக்குவதற்கும் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. உதாரணமாக 2009 செப்டம்பர் மாதம் ஜே.எஸ்.திசைநாயகம் என்ற ஊடகவியலாளருக்கு பயங்கரவதத் தடை சட்டத்தின் கீழ் 20 வருட கால கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. கிழக்கு இலங்கையில் இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட சமயத்தில் தமிழ்ப் பொதுமக்கள் நடத்தப்பட்ட விதம் குறித்து அரசாங்கத்தை விமர்சித்து இவர் பத்திரிகையில் கட்டுரைகள் எழுதியதற்காக அவருக்கு இத்தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. ஜனவரி 11ஆம் தேதியன்று இவர் பிணையில் வெளிவர அனுமதிக்கப்பட்டுள்ளார் என்பது வரவேற்கத்தகுந்தது என்றாலும், அவர் மனதளவில் தொடர்ந்து அவர் ஓர் கைதியாகவே இருப்பார் என சர்வதேச பொதுமனிப்பு சபை கருதுகிறது. அவர் மீதான தண்டனை முழுமையாக ரத்துசெய்யப்பட வேண்டுமென அது வலியுறுத்துகிறது. இலங்கையில் கருத்து சுதந்திரத்தை ஒடுக்கும் சட்டங்கள் மற்றும் விதிமுறைகள் ஒரு புறம் என்றால், மறுபுறம் ஊடகவியலாளர்கள்[2], சட்டத்தரணிகள், அரச படையினருக்கு எதிரான சாட்சிகள், மனித உரிமை ஆர்வலர்கள் போன்றோர் அரசுடன் தொடர்புகொண்டவர்கள் என்று கருதப்படும் இனந்தெரியாத நபர்களினால் அச்சுறுத்தப்பட்டும் தாக்கப்பட்டும் வரும் போக்கு காணப்படுகிறது. இவ்வகையான எதேச்சதிகார சட்ட நடவடிக்கைகள், அச்சுறுத்தல்கள் மற்றும் தாக்குதல்கள் எல்லாம் சேர்ந்துகொண்டு சட்டத்தின் மாட்சிமை மீது பொதுமக்கள் கொண்டுள்ள நம்பிக்கை இழக்க வழிவகுத்துள்ளதோடு கருத்து சுதந்திரம், ஒருவரோடு ஒருவர் சேர்ந்து செயல்படும் உரிமை போன்றவை உறைந்துபோகும் நிலையையும் ஏற்படுத்தியுள்ளது.

தேர்தல் வேட்பாளர்களை இலங்கை வாக்காளர்கள் மதிப்பீடு செய்ய இடமுள்ளது என்பதை உறுதிசெய்ய அந்நாட்டில் சுதந்திரமான ஊடகங்கள் இருப்பது அவசியம். வேட்பாளர்களின் நிலைப்பாடு மற்றும் கொள்கைகள் தொடர்பில் அவர்கள் சரியான அபிப்பிராயங்களை வளர்த்துக்கொள்ளவும் அதிகாரிகளின் செயற்பாடுகள் கண்காணிக்கப்படவும் அப்போதுதான் வழிபிறக்கும். தண்டனை, துன்புறுத்தல், வன்முறை போன்றவற்றுக்கு ஆளாக நேரிடும் என்ற அச்சமின்றி ஊடகவியலாளர்கள் தமது தொழில்சார் பணிகளை நிறைவேற்ற இடமிருக்க வேண்டும்.

இடம்பெயர்ந்த மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ள முகாம்களுக்குள் செல்ல

---

2 2004ஆம் ஆண்டு முதல் இலங்கையில் 15 ஊடகவியலாளர்கள் தாம் எழுதிய கட்டுரைகளுக்காகக் கொல்லப்பட்டுள்ளனர். ஜூன் 2008 க்கும் ஜூன் 2009க்கும் இடைப்பட்ட ஓராண்டு காலத்தில் மட்டுமே 11 பேர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

ஊடகவியலாளர்களுக்கும், மனித உரிமை ஆர்வலர்களுக்கும் அனுமதி மறுக்கப்பட்டுவருகிறது. தவிர இவர்கள் யாழ் குடாவுக்கு செல்லவும் பாதுகாப்பு அமைச்சகம் அனுமதி மறுப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களின் நிலை குறித்து கண்காணிக்கவும் செய்தி வழங்கவும், யுத்தப் பிரதேசம் பற்றிய பாதிக்கப்பட்ட மக்களின் அனுபவங்களை வெளியிடவும் இதன் காரணமாக தடை ஏற்படுத்தப்படுகிறது. அடுத்த ஜனாதிபதியாக வருபவர் தீர்க்க வேண்டிய முக்கிய மனித உரிமை விவகாரங்களாக அமையக்கூடிய விடயங்கள் இவை.

ஊடகவியலாளர்கள், மற்றும் விமர்சனக் கருத்து வெளியிடும் ஏனையோர் எதேச்சதிகார சட்ட நடவடிக்கைகளுக்கோ, அச்சுறுத்தலுக்கோ, தாக்குதலுக்கோ ஆளாவதை முடிவுக்குக் கொண்டுவர வேட்பாளர்கள் குரல்கொடுக்க வேண்டும். ஊடகவியலாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள், கருத்து சுதந்திரத்தைப் பயன்படுத்தும் ஏனையோர் தாக்கப்பட்ட சம்பவங்கள் பலன்தரக்கூடிய வகையில் விசார்க்கப்பட்டு, தாக்குதலுக்குக் காரணமானவர்கள் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவதை வெற்றி பெறும் வேட்பாளர் உறுதிசெய்ய வேண்டும். பின்வருவனவற்றையும் அவர் மேற்கொள்ள வேண்டும்:

- மக்களுடைய கருத்து சுதந்திரத்தை அரசு நிறுவனங்களோ அதிகாரிகளோ ஒடுக்கக்கூடாது என்பதையும், அதிகார துஷ்பிரயோகம் தொடர்பான முறைப்பாடுகள் உடனடியாக விசாரிக்கப்பட்டு, தவறுசெய்தவர்கள் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவதையும் உறுதிசெய்ய வேண்டும்.

- இலங்கையின் அரசியல் சாசனத்துக்கும், சர்வதேச மனித உரிமை கடப்பாடுகளுக்கும் எதிராக கருத்துச் சுதந்திரத்தை ஒடுக்கும் வகையிலான ஊடக நிர்வாக சபை சட்டத்தை ரத்து செய்யும் சட்ட மசோதா அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

- அரசாங்க அமைப்புகளிடம் இருந்து பொதுமக்கள் தகவல் பெறுவதற்கு அனுசரணை வழங்கும் சட்ட மசோதா அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

### 6. முழுமையான மற்றும் பலன்தரக்கூடிய குற்றவியல் புலன் விசாரணைகள் நடத்தப்படுவதை உறுதி செய்தல்

சர்வதேச மனித உரிமை மீறல் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல் சம்பவங்கள் தொடர்பான குற்றவியல் புலன் விசாரணைகள் துரிதப்படுத்தபடுவதை தேர்தல் வேட்பாளர்கள் உறுதி செய்ய வேண்டும். விசாரணைகளில் பொலிசாருக்கு முழுமையான ஒத்துழைப்பு கிடைக்க வேண்டும். விசாரணைகளுக்கு தடையாய் இருப்பவர்கள் மீது தாமதமின்றி சட்டபூர்வமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

மனித உரிமை மீறல்களை விசாரிப்பதற்குரிய செயல்திறனும் நம்பகத்தன்மையும் கொண்ட அமைப்புகளும் நடைமுறைகளும் இலங்கையில் போதிய அளவில் இல்லை. இலங்கையின் குற்றவியல் நீதி நிர்வாகக் கட்டமைப்பு மீளாய்வு செய்யப்படும்போது அப்படிப்பட்ட அமைப்புகளையும் நடைமுறைகளையும் உருவாக்கப்படுவதை அரசாங்கம் அராய வேண்டும். (சுயாதீன சட்ட நடவடிக்கை அதிகாரி என்ற பொறுப்பை உருவாக்குவதை இதற்கான ஒரு யோசனையாகத் தெரிவித்துக் கொள்கிறோம்.)

வலிமையும் புத்துயிரும் ஊட்டப்பட்ட தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் ஒத்துழைப்போடு பக்கச்சார்பற்ற விசாரணைகளை நடத்துவதென்பது இந்த அமைப்பின் நோக்கமாக இருக்க வேண்டும்.

தவிர இலங்கையில் சாட்சிகள் பாதுகாப்பு செயல்திட்டம் என்று ஒன்று இல்லாமல் இருப்பது மோசமான மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு அடிப்படையான ஓர் தடங்கலாக அமைந்துள்ளது. அமைக்கப்படுகின்ற சாட்சிகள் பாதுகாப்பு செயல்திட்டத்துக்கு போதிய நிதி ஆதாரமும், ஆட்பலமும், தொழில்நுட்ப ஆதரவும் இருக்க வேண்டும். பொருத்தமான சந்தர்ப்பங்களில் சாட்சியங்கள் வீடியோ தொடர்பு மூலம் நேரில் வராமலேயே சாட்சியம் வழங்குவதற்கு இடமளிக்கும் வகையில் இலங்கையின் குற்றவியல் நடைமுறை சட்டத்தில் மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டும். சாட்சியின் எங்கிருக்கிறார், அவருடைய புதிய பெயர் விபரம் என்ன என்பதுபோன்ற கேள்விகள் இல்லாமல் ஒருவர் சாட்சியம் வழங்க இடம் அளிக்கப்பட வேண்டும். சாட்சிகளுக்கும் அவர்களுடைய குடும்பத்தினருக்கும் புதிய அடையாள விபரங்கள் சட்டபூர்வமாகவும் பாதுகாப்பாகவும் உருவாக்கித் தரப்பட வேண்டும்.

## 7. முக்கிய அமைப்புகள் சுயாதீனமாகச் செயல்படுவதற்கு இடமிருப்பதை உறுதிசெய்தல்

இலங்கை அரசியல் சாசனத்தின் 17ஆவது சட்டத்திருத்தம் நடைமுறைக்கு வருவதாக தேர்தல் வேட்பாளர்கள் உறுதி பூண வேண்டும். மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்யக்கூடிய இலங்கையின் முக்கிய அமைப்புகள் செயல்படுவதற்கும் கண்காணிக்கப்படுவதற்கும் பொறுப்பான அரசியல் சட்டத்தில் உறுதிவழங்கப்பட்டுள்ள ஆணைக் குழுக்களின் மீண்டும் சுயாதீனமாகவும் செயல்துடிப்புடனும் திகழ்வதை உறுதிசெய்ய வேண்டும். அந்த நோக்கத்தில் அரசியல் சட்ட நிர்வாக சபைக்கு புத்துயிர் வழங்கப்படல் வேண்டும். தேர்தல் ஆணையம், அரசாங்கப் பணி ஆணைக்குழு, தேசிய பொலிஸ் ஆணையம், நிதி நிர்வாக ஆணையம், மனித உரிமைகள் ஆணையம், லஞ்சம் மற்றும் ஊழல் தடுப்பு ஆணையம், தொகுதிகள் நிர்ணய ஆணயம் (தேர்தல் தொகுதிகளின் எல்லையை நிர்ணயத்துக்குப் பொறுப்பானது)[3] ஆகியவையும் இந்த ஆணைக் குழுக்களில் அடங்கும்.

பொலிஸ் அதிகாரிகள் மோசமாக நடந்துகொள்வது அதிகார துஷ்பிரயோகத்தில்

---

3 இலங்கை அரசியல் சாசனத்தின் 17ஆவது சட்டத் திருத்தம் 2001ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. சில முக்கிய பொறுப்புகளுக்கான நியமனங்களில் அரசியல்வாதிகளின் தலையீட்டை நீக்கும் ஒரு முயற்சி இது. முக்கிய பொறுப்புகளுக்கு முன்மொழியப்படுவோரின் பெயருக்கு அரசியல் சாசன நிர்வாக சபை ஒப்புதல் வழங்க வேண்டும். இந்த நிர்வாக சபையில் ஆளும் கட்சி மட்டுமல்லாது எதிர்க்கட்சி மற்றும் அரசியல் அமைப்பு சாரா பிரமுகர்களும் இடம்பெற்றிருப்பர். 2006ஆம் ஆண்டு இந்த அரசியல் சாசன நிர்வாக சபையின் ஆயுட்கால நீட்டிப்பு காலாவதியாக அனுமதிக்கப்பட்டது. ஒரு முக்கிய பொறுப்புக்காக முன்மொழியப்பட்ட ஒருவர் தொடர்பில் அரசியல் கட்சிகள் இடையே கருத்தொற்றுமை ஏற்படாதது இதன் காரணம். இப்படியான முக்கிய அமைப்புகளுக்கான பொறுப்புதாரிகளை நியமிப்பதில், அரசியல் சாசன விதிமுறைகளைக் கடைப்பிடிக்காது ஜனாதிபதி ராஜபக்ஷ நேரடியாக ஆட்களை நியமித்து வந்தது, இந்த அமைப்புகளின் பக்கச்சார்பின்மைக்கு பங்கம் விளைவித்துவிட்டது.

ஈடுபடுவது போன்றவற்றை கண்காணிப்பதற்கென்றும், அவை தொடர்பான பொதுமக்களின் புகார்கள் முறையாக விசாரிக்கப்படுவதை உறுதிசெய்வதற்கென்றும் அமைக்கப்பட்ட தேசிய பொலிஸ் ஆணையம் துடிப்புடனும் சுயாதீனமாகவும் செயல்படுவது உறுதிசெய்யப்பட வேண்டும் என்று குறிப்பிட்டு வலியுறுத்துகிறோம். இலங்கையின் மனித உரிமைகள் ஆணையத்துக்கும் வலுவூட்ட வேண்டும். அவ்வாணையத்தின் சுயாதீனத் தன்மை மீண்டும் நிலைநிறுத்தப்படவும் பாதுகாக்கப்படவும் வேண்டும். அனைத்து மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவும் விசாரணை செய்யக்கூடிய ஒரு நிலையில் அந்த ஆணையம் இருக்க வேண்டும்.

தேசிய மனித உரிமைகள் ஆணையம் மனித உரிமை மீறல் சம்பவங்களை சுயாதீனமாகவும், முழுமையாகவும் பலன்தரக்கூடிய வகையிலும் விசாரிப்பதை சாத்தியப்படுத்தும் விதமாக அவ்வமைப்பின் பணிகளுக்கு முழுமையான பொருளாதார ஆதரவு வழங்கப்படல் வேண்டும். விசாரணைகளிலும் சட்ட நடவடிக்கைகளிலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உதவக்கூடிய தகவல்கள் அவர்களுக்கு முழுமையாக கிடைக்க வகைசெய்யும் செயல்திட்டம் ஒன்று நிறுவப்பட வேண்டும். தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் பரிந்துரைகள் முக்கியத்துவம் பெறும் வகையிலான நடைமுறைகள் சட்டத்தில் கொண்டுவரப்பட வேண்டும்.

மனித உரிமை மீறல்கள் விசாரிக்கப்படுதல் தொடர்பில் பொலிசார், சட்டமா அதிபர் திணைக்களம், தேசிய மனித உரிமைகள் ஆணையம் ஆகியவற்றுக்கு இடையில் ஒத்துழைப்பைக் கொண்டுவருவதற்கான விதிமுறைகள் ஏற்படுத்தப்படுதல் அவசியம். அதேநேரம் தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் சுயாதீனத் தன்மைக்கு பங்கம் வரக்கூடாது. இந்த விதிமுறைகள் பற்றிய விபரங்களும் அறிந்துகொள்ள இடமிருக்க வேண்டும். அப்போதுதான் தமது முறைப்பாடுகள் எவ்வாறு விசாரிக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை மக்களால் புரிந்துகொள்ள முடியும்.

### 8. மனித உரிமை மீறல்களைச் செய்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கான தேசியக் கொள்கையும் செயல்திட்டமும் உருவாக்கப்படுதல்

மனித உரிமை மீறல்கள் மனிதாபிமான சட்ட மீறல்களில் ஈடுபட்டவர்கள் சட்ட நடவடிக்கையிலிருந்து தப்பிப்பது என்பது இலங்கையைப் பொறுத்தவரை விதிவிலக்கல்ல அதுதான் விதி  என்று சொல்லுமளவுக்கு நிலைமை இருந்துவருகிறது. யுத்த காலத்திலும், முன்பு யுத்தம் நடந்த பகுதிகளிலும்தான் இந்த நிலைமை என்றில்லை. நாட்டில் பரவலாகவே இதே நிலைமைதான். உள்நாட்டுக் கிளர்ச்சிக்கு எதிரான நடவடிக்கையில் மட்டும் என்றில்லாது அன்றாட சட்ட ஒழுங்கு பிரச்சினைக்கெதிரான பொலிஸ் நடவடிக்கைகளிலும் இதே நிலைமையே காணப்படுகிறது.  மனித உரிமைகளை மதிக்கப்படுவது என்பதிலும், குற்றவாளிகள் சட்ட நடவடிக்கைகளிலிருந்து தப்பி வரும் நிலையை முடிவுக்கு கொண்டுவருவது என்பதிலும் தனக்குள்ள ஈடுபாட்டை வெளிப்படுத்தும் நடவடிக்கையின் முதல் கட்டமாக, அரச படையினர் தவறு செய்துள்ளனர் என்பதை இலங்கையின் புதிய ஜனாதிபதி வெளிப்படையாக ஒப்புக்கொள்ளவும், மனித உரிமை மீறல்களுக்கு எதிராக வலுவாக குரல்கொடுக்கவும் வேண்டும். மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்கள் -  முந்திய அரசாங்கங்களின் கீழ் நடந்த மீறல்கள் உட்பட அனைத்தும் விசாரிக்கப்படும் என்பதை அவர் பொதுமக்களிடம் அறிவிக்க வேண்டும். மீறல்

செய்தவர் யாராக இருந்தாலும் சரி அல்லது பாதிக்கப்பட்டவர் யாராக இருந்தாலும் சரி விசாரணைகள் முன்னெடுக்கப்படவே செய்யும் என்பதை அவர் அறிவிக்க வேண்டும். சந்தேக நபர் எவராக இருந்தாலும் - அவரின் பதவி, அரசியல் செல்வாக்கு எப்படிப்பட்டதாக இருந்தாலும் - அவர் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை புதிய ஜனாதிபதி தெளிவுபடுத்த வேண்டும்.

குற்றமிழைத்தவர்கள் அனைவருக்கும் எதிராக பலனளிக்கக்கூடிய விசாரணைகள், ஒழுங்கான நடைமுறைகள், முறையான சட்ட நடவடிக்கைகள் ஆகியவை நடப்பதை உறுதிசெய்வதன் மூலமாக வாக்குறுதிகள் செயல்வடிவம் பெறுவதை அரசாங்கம் உறுதிசெய்ய வேண்டும். குற்றம் செய்தவர் அரசியல் செல்வாக்கு உடையவராகவும், உயரிய சமூக அந்தஸ்து உடையவராகவும் இருந்தாலும்கூட அவரும் இதே வகையில் நடத்தப்படுதல் வேண்டும்.

**9. சர்வதேச ஒப்பந்தங்களை ஏற்று, அவற்றிலுள்ள கடப்பாடுகளை மதித்து நடத்தல்:**

பின்வரும் சர்வதேச ஒப்பந்தங்களை ஏற்று அவற்றிலுள்ள கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை தேசிய சட்டங்களில் சேர்த்து, நடைமுறைப்படுத்த வேண்டும் என தேர்தல் வேட்பாளர்கள் உறுதி பூண வேண்டும்:

- பலவந்தமாகக் கொண்டுசெல்லப்படுவதிலிருந்து அனைவருக்கும் பாதுகாப்பு வழங்கு சர்வதேச ஒப்பந்தம்,
- சித்ரவதை மற்றும் பிறவகையில் கொடூரமான, மனிதத்தன்மையற்ற அல்லது இழிவான நடத்தை மற்றும் தண்டனைக்கு எதிரான ஒப்பந்தத்தில் உள்ள கூடுதல் விதிமுறை (சுயவிருப்பத்தின் பேரில் தேர்ந்தெடுக்கப்படுகின்ற விதிகுறை) ;
- சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தொடர்பான ரோம் சட்டம்,
- ஐ.நா. மனித உரிமைகள் குழுவின் கருத்துகளுக்கு செயல்வடிவம் தரும் வகையிலான சட்ட நடைமுறைகள்.

இவற்றுக்கும் கூடுதலாய், இலங்கை ஏற்கனவே அங்கீகரித்துள்ள மனித உரிமைச் சட்டங்கள், தேசிய சட்டங்களில் கொண்டுவரப்பட்டு, கொள்கையிலும் நடைமுறையிலும் அமலாக்கப்படுவது என்பதை உறுதிசெய்வதில் தேர்தல் வேட்பாளர்கள் ஈடுபாடு காட்ட வேண்டும்.

**10. மரண தண்டனையை ஒழித்தல்**

இலங்கையின் சட்டப் புத்தகங்களில் மரண தண்டனை இன்றளவும் இடம்பெற்றிருக்கவே செய்கிறது. மரண தண்டனை நிறைவேற்றப்படுவதற்காக காத்திருப்போர் பட்டியலில் நூற்றுக்கணக்கானோர் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆனால் மரண தண்டனை நிறைவேற்றப்படுவதற்கு ஜனாதிபதியின் ஒப்புதல் தேவை எனும் சூழலில், கடந்த சில தசாப்தங்களாக இலங்கையில் மரண தண்டனை ஏதும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

மரண தண்டனை  ஒருவர் உயிர் வாழ்வதற்குள்ள உரிமையை மீறும் செயல் என்றும், உச்சகட்ட கொடூரமான, மனிதத்தன்மையற்ற மற்றும் இழிவான ஒரு தண்டனை அது என்றும் சர்வதேச பொதுமன்னிப்பு சபை கருதுகிறது. சிறைத் தண்டனையை விட மரண தண்டனை மீதான அச்சம் காரணமாக குற்றங்கள் குறையும் என்பதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை. மேலும், இலங்கையின் நீதி நிர்வாகக் கட்டமைப்பில் உள்ள குறைபாடுகள் மற்றும் பிரச்சினைகள் – ஒருவர் குற்றத்தை ஒப்புக்கொள்ள வைப்பதற்காக அவர் சித்ரவதைக்கு உள்ளாக்கப்படுவது போன்ற பிரச்சினைகள் – காரணமாக அங்கே நிரபராதிகள் மீது கூட மரண தண்டனை விதிக்கப்படுவதற்கு வாய்ப்புகள் அதிகம்.

மரண தண்டனையை ஒழிக்கவும், குற்றங்களைக் குறைக்க மாற்றுத் தீர்வுகளைக் கண்டறியவும் ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர்கள் அனைவரும் உறுதி ஏற்க வேண்டும் என சர்வதேச பொதுமன்னிப்பு சபை வலியுறுத்துகிறது.